**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 50 of 2020

பெயர் : பாக்கியலட்சுமி

16.9.2025

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னுடைய முகவரி என்ன என்று கேட்டால், தற்போது நான் பெங்களூரில் என் மகள் வீட்டில் இருக்கிறேன், அந்த வீட்டின் முகவரி No.8, ஜோதி நிவாஸ், இந்திராகாந்தி தெரு, 2nd மெயின், தூர்வாணி நகர், பெங்களூர்– 16 ஆகும். நான் மேற்கூறிய முகவரியில் தற்போது குடியிருக்கிறேன் என்பதை காட்டுவதற்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை போன்ற ஆவணங்கள் இருக்கின்றனவா என்று கேட்டால், குடும்ப அட்டை இல்லை, ஆதார் அட்டையும் மேற்கூறிய முகவரியில் இல்லை.

இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்தது, ஆனால் அதை நான் வாங்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படுவது தான் இந்த நீதிமன்றத்திலிருந்து பதிவு தபால் மூலம் வந்த சம்மன் அடங்கிய திரும்பி வந்த போஸ்டல் கவர் என்று சொன்னால், ஆமாம், இந்த போஸ்டல் கவர் Exhibit C1. இந்த Exhibit C1 No such person என்று தான் திரும்பி வந்துள்ளது என்று சொன்னால், ஆமாம், ஆனால் அது தவறாகும், நான் ஊருக்கு வந்துவிட்டேன். நான் மேலே

குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள பெங்களூர் முகவரியும், Exhibit C1 ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியும் மாறுபடுகிறது என்று சொன்னால், சரியில்லை, இரண்டும் ஒன்றுதான், Exhibit C1 ல் கூடுதலாக A Narayanapura, Udhaya Nagar என்று போடப்பட்டுள்ளது. நான் Exhibit C1 ல் கண்டுள்ள முகவரியில் தற்போது குடியிருந்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு எந்த விதமான அரசு அத்தாட்சியும் இல்லை, எனது மகள் வீட்டில் குடியிருந்து வருகிறேன்.

நான் பெங்களூரில் என் மகள் வீட்டில் 10 முதல் 13 வருடங்களாக குடியிருக்கிறேன். நான் 09.09.1993 ம் தேதி பாதராயனபுரா, 9th மெயின், பெங்களூர்–26 ல் குடியிருந்தேன். நான் 09.09.1993 ம் தேதி மேற்கூறிய முகவரியில் குடியிருந்து வந்தேன் என்பதை காட்டுவதற்கு குடும்ப அட்டை, அடையாள அட்டை போன்ற அரசு ஆவணங்கள் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால், தெரியவில்லை என்று சாட்சி முதலில் கூறிவிட்டு, வாக்காளர் அடையாள அட்டை ஒன்று இருந்தது, தேடி பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். நான் சொல்லும் வாக்காளர் அடையாள அட்டையை என்னால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியுமா என்று கேட்டால், பார்த்துவிட்டு தான் சொல்ல முடியும்.

நான் என்னுடைய முகவரியை காண்பிப்பதற்கு என் முதல் விசாரணையில் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை

என்று சொன்னால், தெரியவில்லை என்று சாட்சி முதலில் சொல்லிவிட்டு பிறகு கொடுக்கவில்லை என்று கூறுகிறார். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வராமலேயே தான் நான் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியிருக்கிறேன் என்று சொன்னால், ஆமாம். நான் 1ம் வாதி ராஜலட்சுமி (எ) தங்கம் சொல்லித்தான் நீதிமன்றத்தில் ஆஜர் ஆனேனா என்று கேட்டால், அவரும், விஜயகுமாரும் சொல்லித்தான் நான் நீதிமன்றத்தில் ஆஜரானேன். நீதிமன்றத்திலிருந்து விஜயகுமாருக்கு வந்த சம்மன் அவரை ஆஜராகி சொல்லிதான் வந்திருக்கும் என்று சொன்னால், ஆமாம், அவருக்கு வந்தால் எனக்கும் வந்திருக்கும். விஜயகுமாருக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததை வைத்து அவரால் எப்படி தீர்க்கமாக எனக்கும் சம்மன் வந்திருக்கும் என்று சொல்ல முடியும் என்று கேட்டால், தெரியவில்லை.

நான் என் கையொப்பத்தை ஆங்கிலத்தில் போடுவேனா அல்லது தமிழில் போடுவேனா என்று கேட்டால், நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் போடுவேன், தமிழ்நாட்டுக்கு வந்தால் தமிழ் மீது உள்ள பற்றினால் தமிழில் கையொப்பம் போடுவேன். நான் 09.09.1993 ம் தேதி என்ன பண்ணி கொண்டிருந்தேன் என்று கேட்டால், என் பெரிய மகள் திருமணத்திற்காக விடுமுறையில் வந்தேன். 09.09.1993 ம் தேதி காலகட்டத்தில் நான் வேலையில் இருந்தேன், ஒரு மாத விடுமுறையில் ஊருக்கு வந்தேன். 09.09.1993 ம் தேதி

காலகட்டத்தில் நான் ராஜேஸ்வரி உயர் ஆரம்ப பள்ளி, மாகடி சாலை, பெங்களூர்–23 என்ற விலாசத்தில் உள்ள பள்ளியில் தமிழ் ஆசிரியையாக பணிபுரிந்து வந்தேன். அந்த பள்ளிக்கு வருகைப் பதிவேடு உள்ளது. அந்த சமயத்தில் நான் அனுமதி கேட்டு விடுப்பு எனக்கு வழங்கப்பட்டதா என்று கேட்டால், ஆமாம் என் மகளின் திருமணத்திற்காக விடுப்பு எடுத்தேன், திருமண பத்திரிக்கை கூட இருக்கிறது, வேண்டுமென்றால் கொடுக்கிறேன். என் மகளுக்கு 30.08.1993 ம் தேதி திருமணம் நடந்தது.

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள ஆவணத்தில் என் கையொப்பத்தை தமிழில் போட்டேனா அல்லது ஆங்கிலத்தில் போட்டேனா என்று கேட்டால், ஆங்கிலத்தில் தான் போட்டேன். நான் அந்த கையொப்பத்தை தமிழ்நாட்டில் போடவில்லையா என்று கேட்டால், தமிழ்நாட்டில் தான் போட்டேன். நான் குறுக்கு விசாரணையில் முதலில் தமிழ்நாட்டுக்கு வந்தால் தமிழ் மீது உள்ள பற்று காரணமாக தமிழில் தான் கையொப்பம் போடுவேன் என்று கூறியுள்ளபோது, இந்த ஆவணத்தில் ஏன் நான் தமிழில் கையொப்பம் போடவில்லை என்று கேட்டால், என் பெயரை தமிழில் எழுதியதால், ஆங்கிலத்தில் கையொப்பம் போட்டேன்.

09.09.1993 ம் தேதி நஞ்சப்பா செட்டியார் மகன் A.N.நடராஜன் எங்கு குடியிருந்தார் என்று கேட்டால்,

மேட்டுப்பாளையத்தில் extension ல் அவர் வீட்டில் குடியிருந்தார், அப்போது அவர் குடியிருந்த வீட்டின் கதவு எண் 94 ஆகும். A.N.நடராஜனுக்கு இரண்டு முறை இருதய அடைப்பு ஏற்பட்டு ஹார்ட் அட்டாக் வந்துள்ளது என்று சொன்னால், அவருக்கு உடம்பு சரியில்லை என்பது தெரியும், ஆனால் என்ன உடம்பு சரியில்லை என்று தெரியாது. A.N. நடராஜனுக்கு எப்போ எப்போ ஹார்ட் அட்டாக் வந்தது, எப்போது வரவில்லை என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால், எனக்கு தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். 08.12.1993 ம் தேதிக்கு மூன்று மாதத்திற்கு முன்பிருந்தே A.N. நடராஜன் உடம்பு சரியில்லாமல் படுத்த படுக்கையாக ஆஸ்பத்திரியில் இருந்தார் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும், அவர் நன்றாக தான் இருந்தார்.

நான் விடுப்பு எடுத்ததாக சொல்லும் தேதி எந்த தேதி முதல் எந்த தேதி வரை என்று கேட்டால், 27 வருடங்கள் ஆவதால் என்னால் சரியாக சொல்ல முடியாது, ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் விடுப்பு எடுத்தேன், ஆகஸ்ட் 15 ம் தேதிக்கு மேல் எடுத்தேன் என்று நினைக்கிறேன். நான் Exhibit A2 ஆவணத்தில் என்னுடைய முகவரி No.9, 9th Cross, Ramaiah Compund, Padarayanapura, Bangalore-26 என்பதை காட்டுவதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால், தற்போது எந்த ஆவணமும் இல்லை.

என் கணவர் பரமசிவம், A.N.நடராஜனின் உடன்பிறந்த சகோதரர் என்று சொன்னால், ஆமாம். என் கணவர் பரமசிவத்தின் முகவரி 09.09.1993 ம் தேதி A.N.நடராஜனின் முகவரிக்கு அருகில் தான் என்று சொன்னால், ஆமாம். 09.09.1993 ம் தேதி என்னுடைய நிரந்தர முகவரி மேட்டுப்பாளையத்தில் இல்லை என்று சொன்னால், ஆமாம், நான் வந்து போய்க் கொண்டிருந்தேன். 09.09.1993 ம் தேதி காலகட்டத்தில் நான் பெங்களூரில் ஆசிரியையாக பணிபுரிந்ததால், விடுமுறை நாட்களை தவிர, பள்ளி இயங்கும் காலத்தில் நான் பெங்களூரில் தான் இருந்தேன் என்று சொன்னால், ஆமாம், ஆனால் என் மகள் திருமணத்திற்கு வந்துவிட்டு போனேன்.

**(இத்தருணத்தில் கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் 09.09.1993 ம் தேதி காலகட்டம் என்பது 09.09.1993 தேதியை மட்டும் தான் குறிக்கும் என்று கூறியதும், அதற்கு கற்றறிந்த 2 முதல் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் அது 09.09.1993 என்ற தேதியை மட்டும் குறிக்காது, அந்த வருடத்தையே குறிக்கும் என்ற அடிப்படையில் தான் குறுக்கு விசாரணை செய்வதாக கூறியதும் பதிவு செய்யப்படுகிறது)**

09.09.1993 ம் தேதிய காலகட்டத்தில் என் கணவரும் அவருடைய உடன்பிறந்த சகோதரரான A.N.நடராஜன் செட்டியாரும் நல்ல இணக்கமாக தான் இருந்தார்கள் என்று சொன்னால், ஆமாம். A.N.நடராஜன் செட்டியாரின் மற்றொரு

உடன்பிறந்த சகோதரரான கிருஷ்ணசாமி செட்டியாரின் குடும்பத்தாரும் 09.09.1993 ம் தேதிய காலகட்டத்தில் A.N.நடராஜன் செட்டியாரின் வீட்டிற்கு அருகிலேயே தான் இருந்தார்கள் என்று சொன்னால், அது எனக்கு சரியாக தெரியவில்லை. 09.09.1993 ம் தேதி என் கணவர் பரமசிவமும், A.N.நடராஜன் செட்டியாரும் உயிரோடு இருந்தார்கள் என்று சொன்னால், ஆமாம்.

நான் சொல்வது போல் A.N.நடராஜன் செட்டியார் சாட்சி கையொப்பம் போடுவதற்கு கூப்பிட்டிருந்தால் அவர் வீட்டிற்கு அருகேயே நிரந்தரமாக எப்போதும் குடியிருக்கும் அவர் உடன்பிறந்த சகோதரரான என் கணவர் பரமசிவத்தை தான் கூப்பிட்டிருப்பார் என்று சொன்னால், என் கணவரையும் என்னையும் கூப்பிட்டார். குறிப்பாக சாட்சி கையொப்பம் போடுவதற்கு என் கணவர் பரமசிவத்தை தான் A.N.நடராஜன் கூப்பிட்டிருப்பார் என்று சொன்னால், அது எனக்கு தெரியவில்லை. A.N.நடராஜன் செட்டியார் சாட்சி கையொப்பம் போடுவதற்கு அவர் வீட்டு அருகேயே குடியிருக்கும் அவருடைய உடன்பிறந்த மற்றொரு சகோதரரான கிருஷ்ணசாமி செட்டியாரின் குடும்பத்தினரான கிருஷ்ணசாமி செட்டியாரின் மனைவி மற்றும் குழந்தைகளை மட்டும் தான் கூப்பிட்டிருப்பார் என்று சொன்னால், அது எனக்கு தெரியாது, ஆனால் என்னை கூப்பிட்டார்.

09.09.1993 ம் தேதியில் அ.சா.3 விஜயகுமாரின் குடியிருப்பு முகவரி என்ன என்று கேட்டால், எனக்கு தெரியாது. அ.சா.3 விஜயகுமார் A.N.நடராஜ செட்டியாரின் உறவினர் இல்லை. என் கணவர் 08.12.1999 ம் தேதி மேட்டுப்பாளையத்தில் இறந்துபோனார். Exhibit A2 ஆவணத்தை நான் எழுதியதாக சொல்வதற்கு முன்பு நான் ஆவணங்களை பார்வையிடவில்லை என்று சொன்னால், மாமா சொன்னார் நான் எழுதினேன். என் மாமா A.N.நடராஜன் எனக்கு சொன்னதாக சொல்லும் காலகட்டத்தில் அவரும் எந்த ஆவணத்தையும் பார்வையிடவில்லை என்று சொன்னால், சரியில்லை, அவர் நிறைய பேப்பர்களை கையில் வைத்திருந்தார். A.N.நடராஜன் என்னென்ன ஆவணங்களை அப்போது பார்வையிட்டார் என்று ஆவணத்தின் பெயரும், தேதியும், அது யார் யாருக்கிடையே ஏற்பட்டது என்பதையும் சொல்ல முடியுமா என்று கேட்டால், அவர் சகோதரர்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்ட ஆவணத்தையும், ஊட்டி, மேட்டுப்பாளையம் சொத்து ஆவணத்தையும் வைத்திருந்தார். அந்த பாகப்பிரிவினை ஆவணம் எந்த வருடம் ஏற்பட்டது என்று கேட்டால், 1966 ம் ஆண்டு ஏற்பட்டது. அந்த பாகப்பிரிவினை ஆவணம் சுப்பையா செட்டியார், நடராஜன் செட்டியார், கிருஷ்ணசாமி செட்டியார் மற்றும் பரமசிவம் செட்டியாருக்கிடையே ஏற்பட்டது. ஊட்டி சம்பந்தமான பத்திரம் வீட்டு பத்திரம் ஆகும், அது எந்த வருடம் ஏற்பட்டது என்பது

சரியாக நியாபகம் இல்லை. மேட்டுப்பாளையம் வீடு சம்பந்தப்பட்ட ஆவணம் என்ன என்று கேட்டால், அது 1966 அல்லது 1968 ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம்தான்.

நான் Exhibit A2 ஐ எழுதியதாக சொல்லும்பட்சத்தில் அதில் எந்தெந்த சொத்துக்களுக்கு உண்டான முழு சொத்து விவரங்களை எழுதினேன் என்று கேட்டால், ஊட்டியில் இருக்ககூடிய ஹோட்டல் சண்முகா, மேட்டுப்பாளையத்தில் உள்ள ஓட்டு வீடு, ஆலாங்கொம்பில் உள்ள இரண்டு வீடு மற்றும் நிலம் ஆகியவற்றை எல்லாம் எழுதினேன்.

மேட்டுப்பாளையத்தில் உள்ள ஓட்டு வீட்டின் விஸ்தீரணம் என்ன என்று நான் Exhibit A2 ல் நான் எழுதியுள்ளேன் என்று கேட்டால், அதெல்லாம் எழுதவில்லை. நான் Exhibit A2 ல் அந்த வீட்டின் கதவு எண்ணையும், அந்த வீட்டை அடையாளம் காட்டக்கூடிய எந்த விவரத்தையும் எழுதவில்லை என்று சொன்னால், ஆமாம்.

ஆலாங்கொம்பில் இருக்கும் இரண்டு வீடுகளின் கதவு எண்களையும், அந்த வீடுகளை அடையாளம் காட்டக்கூடிய எந்த விவரத்தையும், அந்த வீடுகளின் விஸ்தீரணத்தையும் நான் Exhibit A2 ல் எழுதவில்லை. நான் நிலம் என்று சொல்லும் நிலத்தின் சர்வே எண்ணையும், விஸ்தீரணத்தையும், செக்குபந்தியையும் Exhibit A2 ல் எழுதவில்லை என்று சொன்னால், ஆமாம் மொத்தமாக மூன்று பேருக்கும் சேர்ந்து இருந்ததால் எனக்கு

விஸ்தீரணம் தெரியாது. நான் மூன்று பேரை என்று யாரை குறிப்பிடுகிறேன் என்று கேட்டால், சுப்பையா செட்டியார், நடராஜன் செட்டியார் மற்றும் கிருஷ்ணசாமி செட்டியார் ஆகும்.

ஒரு ஆவணத்தை எழுத வேண்டுமென்றால் பொதுவாக ஆவண எழுத்தரோ அல்லது வழக்கறிஞரோ எழுதுவார்கள் என்று சொன்னால், அது எனக்கு தெரியவில்லை. நான் எழுதியதாக சொல்லும் Exhibit A2 ஆவணத்தில் எந்தெந்த ஆவணத்தை குறிப்பிட்டு எழுதியுள்ளேன் என்று கேட்டால், எல்லாமே மாமா வைத்திருந்தார், எனக்கு தெரியவில்லை, மாமா சொன்னார் நான் எழுதினேன்.

நான் முதல் விசாரணையில் ரப்பாக எழுதிய உயிலில் என் மாமா நடராஜன் படித்து பார்த்துவிட்டு திருத்தங்கள் செய்ததாக சொல்லும் அந்த ரப்பான உயிலை நான் ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று கேட்டால், அதை என் மாமா வைத்திருந்தார், ஏன் தாக்கல் செய்யவில்லை என்று தெரியவில்லை. Exhibit A2 ல் நானும், விஜயகுமாரும், A.N.நடராஜனும் கையொப்பம் செய்ததாக சொல்வது ஒரே பேனாவால் ஒரே மையா என்று கேட்டால், இல்லை வேறு வேறு பேனாவாகும். நான் Exhibit A2 ல் கையொப்பம் செய்ததாக சொல்லும் மையின் நிறமும், விஜயகுமார் கையொப்பம் செய்ததாக சொல்லும் மையின் நிறமும், A.N.நடராஜன் கையொப்பம் செய்ததாக சொல்லும் மையின் நிறமும் என்ன என்று கேட்டால்,

நீல நிறம் தான் என்று சாட்சி முதலில் கூறிவிட்டு பிறகு சாட்சி நான் போட்டது நீலநிறம் என்றும், மற்றவர்கள் போட்டது என்ன நிறம் என்று தெரியாது என்று கூறுகிறார். நான் எழுதியதாக சொல்லும் Exhibit A2 என்ன நிற மையால் எழுதப்பட்டது என்று கேட்டால், நீலநிறம் தான் என்று நினைக்கிறேன், சரியாக நியாபகம் இல்லை. நான் எழுதியாக சொல்லும் Exhibit A2 ஆவணம் எத்தனை தாள்களை அடங்கியது என்று கேட்டால், 5 தாள்கள் என்று நினைக்கிறேன். Exhibit A2 ஆவணத்தின் பேப்பர் என்ன கலர் என்று கேட்டால், அதெல்லாம் வயதாகிவிட்டதால் நியாபகம் இல்லை, மாமா எடுத்து வந்து கொடுத்தார். Exhibit A2 ல் G.VIJAYAKUMAR என்று capital letter ல் எழுதியது யார் என்று கேட்டால், அது நியாபகம் இல்லை. நான் கடைசியாக Exhibit A2 ஆவணத்தை எப்போது பார்த்தேன் என்பது நியாபகம் இல்லை.

1ம் வாதி ராஜலட்சுமியின் கணவர் N.N.சண்முகம் ஒரு வழக்கறிஞர் என்று சொன்னால், ஆமாம்.